


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்





கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

மரம் 4 பிப்ரவரி 2004 கனி 3

ஆசிரியர்
B. அர்ஜூனன்

"மனுசகுமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்யவும், அநேகரே மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்"
மாற் 10:45

கிறிஸ்துவின் வசனம்



நீத்திய வசனம்

தஞ்சைமாவட்டத்தில் நடைபெற்ற பதின்மூன்றாவது வாசகர் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்கள்.

## ஒருவழி (தபால்வழி பாடத்திட்டம்)
## MASTER COURSE

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்று நீங்கள் இரட்சிக்கப்பட அருமையான பாடத்திட்டம் இது. இப்பயிற்சியில் சேர்ந்து படிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

| | |
|---|---|
| சேர்க்கை கட்டணம் | : ரூபாய் 30 (தபால் செலவுக்காக) |
| வயது | : 20க்கு மேல் |
| ஆண்டுகள் | : இரண்டுவருடம் |
| பாடத்திட்டம் | : ஆறு பகுதிகள் |
| மொழி | : தமிழ் |

ஆறு பகுதிகளை முடிப்பவர்களுக்கு இறுதிச் சான்றிதழ் **MASTER COURSE CERTIFICATE** வழங்கப்படும். இன்றே ரூபாய் 30 செலுத்தி உங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளுங்கள் . இப்பாடத்திட்டம் உங்கள் வீடுதேடி வரும்.)

*குறிப்பு:*
உங்கள் முகவரியை ஆங்கிலத்தில் மாவட்டம், பின்கோடு உள்பட தெளிவாக எழுதி அனுப்பவும்.


**BATLAGUNDU BIBLE COLLEGE**
**Post Box No: 5**
**Batlagundu - 624 202 South India**

**FOR FREE DISTRIBUTION**

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

Published by
**WORLD LITERATURE PUBLICATIONS**
**Post Box No. 5, Batlagundu - 624 202.**
**SOUTH INDIA.**

*"கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோமர் 16:16)*



# ஆசிரியரின் அவசர கடிதம்

10. 2. 2004

***வாசக நல் உள்ளங்களுக்கு,***

நல் மீட்பர் இயேசுவின் தூய நாமத்தில் வாழ்த்துக்கள். "இலவசமாய் பெற்றீர்கள் இலவசமாய் கொடுங்கள்" (மத்.10:8) என்ற கிறிஸ்துவின் வசனத்தைப்பெற்ற நாங்கள் இதுவரை நமது மாத இதழை இலவசமாக வெளியிட்டு வந்தோம். இனிமேல் போஸ்டல் கன்சஷனில் நமது மாத இதழை இலவசமாக வெளியிட முடியாத சூழ்நிலையில் உள்ளோம். ஆகையால் பத்திரிக்கைக்கு வருடசந்தாவாக ரூ.50/- நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உங்களது சந்தாவாக மேற்கண்ட தொகையை அனுப்பி உங்களுடைய முகவரியை புதுப்பித்துக்கொள்ளுங்கள். புதுப்பிக்கக் கூடியவர்களுக்கு மட்டுமே எதிர்வரும் மாதத்திலிருந்து இவ்விதழை நாங்கள் தொடர்ந்து அனுப்ப இயலும் என்பதை இக்கடிதத்தின் மூலம் தெரியப்படுத்திக் கொள்கிறோம். தயவு செய்து ஒத்துழைப்பு தாருங்கள். "தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது" (ரோம.13:1). **அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து ஆசீர்வாதம் பெறுவோம்.**

நம் தேவனுடைய கரத்தால் உருவாக்கப்பட்டவரே இவ்வருட இறுதிக்குள் குறைந்த பட்சம் பத்து வாசகர்களையாவது அடையாளம் கண்டு அவர்களுக்கு கிறிஸ்துவின் வசனமாத இதழை கொடுத்து அவர்களை கிறிஸ்துவுக்கு நேரே வழிநடத்துங்கள். இதுவே உங்கள் பரலோக பொக்கிஷமாக அமையட்டும். இந்தியாவில் உள்ள **100** கோடிக்கும் மேலான நமது இந்திய சகோதரர்களுக்கு யார் நற்செய்தி சொல்லுவது? அதில் நீங்களும் ஒருவராக இருக்கலாமே!

***குறிப்பு:***
***பத்திரிக்கையை தொடர்ந்து தாங்கிவருகிறவர்கள் சந்தா அனுப்பி முகவரியை புதுப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை***

***"விதைக்கிறவனுக்கு விதையையும் புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து,அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின்விளைச்சலை வர்த்திக்கச்செய்வார்" (2கொரி.9:10)***

கண்ணீரோடு ஜெபித்து இக்கடிதத்தை
அனுப்பும் உங்கள் ஆசிரியர்
B. அர்ஜூனன்

# திி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

# THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 4 பிப்ரவரி - 2004 கனி - 8


ஆசிரியருரை

## எதைப்பார்க்கப் போனீர்கள்?

*What went ye out for to see?*

"அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து; மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்"(மத்.3:1,2). ஆதிமுதல் யூதேயாவில் உள்ள எருசலேமை தேவன் தெரிந்துகொண்டார். ஆதலால் எருசலேம் துவங்கி மனந்திரும்புதலின் செய்தியானது சகல தேசத்தாருக்கும் அறிவிக்கப்பட்டு வருகிறது. இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான்ஸ்நானன் இங்கு தமது முதல் பணியை துவக்கினான், அவனுக்கு பின்பு வந்த இயேசுவும் தமது ராஜ்யமாகிய சபைப் பணியை இங்கு துவக்கி சகல தேசத்தாருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்ற மாபெரும் கட்டளையைக் கொடுத்தார்.



"இயேசுவானவர் யோவானைக்குறித்து ஜனங்களுக்குச் சொன்னது என்னவென்றால்: எதைப்பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ? அல்லவென்றால், எதைப் பார்க்கப் போனீர்கள்? மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையா? மெல்லிய வஸ்திரந்தரித்திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்கள் அல்லவென்றால், எதைப் பார்க்கப்போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அதெப்படியெனில்; இதோ நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்டவன் இவன் தான். ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப்

பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்" (மத்.11:7-11) என்றார்.

இன்று சுவிசேஷத்தை கேட்க வருகிறவர்களையும், சுவிசேஷத்திற்கு கீழ்படிகிறவர்களையும், சபைக்கு செல்லுகிற வர்களையும் பார்த்து ஆண்டவர்கேட்ட அதே கேள்வியை நாம் கேட்போமானால் எப்படியிருக்கும் என்பதை சற்று யோசித்துப்பாருங்கள். அன்று வனாந்தரத்தில் வந்து; மனந்திரும்புங்கள், பரலேகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். ஆண்டவர் இதைக் கேட்க கடந்து சென்ற ஜனங்களைப் பார்த்து எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள் காற்றினால் அசையும் நாணலையோ? என்று கேட்டார். ஆக மனந்திரும்புதலுக்கு ஏற்ற செய்தியை கேட்கப் போகாமல் காற்றினால் அசையும் நாணலை பார்க்க கடந்து சென்றிருக் கிறார்கள். ஆகையினாலே அவர் இக்கேள்வியைக் கேட்டிருக்கக் கூடும். அதைப்போலவே இன்று சுவிசேஷத்தைக்கேட்க வருகிறவர்கள், சுவிசேஷ வசனங்களைக் கேட்டு கீழ்படிவதை விட்டு விட்டு, அங்குள்ள அலங்காரப் பொருட்களையும், ஜனக்கூட்டத்தையுமே காண்கிறார்கள். தேவன் எதை முக்கியப்படுத்தி இருக்கிறாரோ அதை அசட்டை செய்து விட்டு கண்களின் காட்சிக்கு தங்களை ஒப்புக்கொடுத்து சுவிசேஷ வசனத்தைக் கேட்டு மனந்திரும்பி தங்களை ஒப்புக்கொடுக்க மறுக்கிறார்கள்.

இரண்டாவது முறையும் கர்த்தர் கேட்ட கேள்வி: அல்லவென்றால், எதைப்பார்க்கப் போனீர்கள் மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? மெல்லிய வஸ்திரந்தரித் திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்கள் என்றார். யோவான்ஸ்நானன் வெட்டுக்கிளியையும், காட்டுத்தேனையும் சாப்பிட்டு ஒட்டகத்தோளை உடுத்தியிருந்தான். அவனிடத்தில் ஆடம்பரம் காணப்படவில்லை. ஆனால் ஜனங்களுடைய எண்ணம் அவன் உயர்ந்த வஸ்திரம் தரித்திருப்பான் பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருப்பான் என்றெல்லாம் கனவு கண்டு அவனை பார்ப்பதற்கு முண்டியடித்துக் கொண்டு சென்று இருப்பார்கள். அவர்களுக்கு கர்த்தர் கூறுகிற காரியம் மெல்லிய வஸ்திரம் தரித்தவர்கள் அரசர் மாளிகைகளில் இருப்பார்கள். இன்றைக்கு அநேக திருச்சபைகளில் அநேகர் தங்களுடைய உயர்ந்த வஸ்திரத்தை, செல்வாக்கை காண்பிக்கவே கடந்து செல்லுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் தேவனை ஆராதிக்க கடந்து செல்லவில்லை தங்களுடைய ஆடம்பரத்தைக் காண்பிக்கவே கடந்து

செல்கின்றனர். இதிலே சில ஊழியக்காரர்களும் வீழ்ந்துபோய், தங்களுடைய மேலான வஸ்திரங்களை உடுத்திக் கொண்டு, மற்றவர்களை அசட்டை செய்து, ராஜாக்களைப்போல உயர்வான சிம்மாசனங்களை போட்டு அமரவுமே விரும்புகிறார்கள். இப்படிப்பட்ட சபைகளுக்கு செல்லுகிறவர்கள் எங்களுடைய சபை இவ்வூரிலே பெரியது, எங்களுடைய சபைக்கு கல்லறை இருக்கிறது. மேலும் பெண் கொடுக்கவும், பெண் எடுக்கவும் வசதியிருக்கிறது என்று பெருமையடித்துக் கொள்வார்கள். அங்கு மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை என்று பார்க்கிறோம். நமது ஆண்டவர் கட்டடத்தையும், கல்லறையையும் சம்பாதிக்கவில்லை. தம்முடைய ரத்தத்தினாலே சபையை சம்பாதித்தார். இதை அறியாத, புரியாத யோவான்ஸ்நானன்காலத்து ஜனங்கள் இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள். நீங்கள் எதைப் பார்க்க செல்லுகிறீர்கள்?

மூன்றாவது முறையும் கர்த்தர் கேட்டகேள்வி: அல்லவென்றால் எதைப் பார்க்கப் போனீர்கள் தீர்க்கதரிசியையோ? ஆம் தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனென்றால் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனும் எழும்பினதில்லை என்று சொல்லுகிறார். அதே வேளையில் மனந்திரும்பி சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு பரலோகராஜ்யமாகிய சபையில் அங்கமாக இருக்கிற ஒருவன் அவனிலும் பெரியவனாக இருக்கிறான். மேலான சத்தியத்தை அறிவிக்க சுவிசேஷகர்கள் ஏற்படுத்தப்படுகிறார்கள். அந்த சுவிசேஷத்தை கேட்கிற ஜனங்களோ கீழான (அதாவது) அழிந்துபோகக் கூடிய காரியங்களையே உற்று நோக்குகிறார்கள். நம் ஜனங்கள் காப்பி அடிப்பதில் கைதேர்ந்தவர்கள். சுவிசேஷத்தையல்ல, அதைத்தவிர எல்லாவற்றிலும். ஒருவர் வீடுகட்டினால் நாமும் அதைப்போல வீடுகட்டவேண்டும், ஒருவன் வசதியுள்ள இடத்தில் திருமணம் செய்தால் நாமும் அதைப்போல செய்யவேண்டும். ஒருவன் அமெரிக்கா போனால் நாமும் அமெரிக்கா போக வேண்டும். இப்படிபட்ட எண்ணத்திலே முன்னேறுகிறார்களே ஒழிய ஆவிக்குரிய காரியங்களில் முன்னேற்றம் இல்லை. இவர்கள் கற்றுக்கொண்டதெல்லாம் மற்றவர்களுடைய அழிந்து போகும் காரியங்களையே. "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ள வைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல. அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம்: தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும்

நிலைத்திருப்பான்"(1யோவா.2:16,17). நீங்கள் உலக காரியங்களை கற்றும் அதில் நிலைத்திருந்து சகல நன்மைகளையும் அனுபவித்தாலும் ஒன்றுமில்லை. அவைகள் மண்ணிலிருந்து வந்தது மண்ணுக்கே திரும்பும் . ஆனால் தேவனுடைய திருசித்தமோ பரத்திலிருந்து சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகின்றது. இதை நிறைவேற்றினால் "இருக்கிறவரைப்போல என்றும் நித்தியத்தில் நிலைத்திருப்பீர்கள்.

ஒரு விசுவாசி, மற்றவிசுவாசிகளையோ அல்லது ஊழியர்களை யோ பார்த்துவிட்டு திரும்பும்போது அந்த நபர் எப்படிப்பட்டவர் என்று கேட்டால் இந்த நபர் கூறும் முதல் பதில் அவருக்கென்னப்பா சொல்லவாவேணும் நல்லா சொகுசாக வாழ்கிறார் என்பார். அப்படியென்றால் இந்த நபர் அவனிடம் எதைப் பார்க்கப்போனார்? அவனுடைய வார்த்தைகளையோ அல்லது அவனது ஆவிக்குரிய ஜீவியத்தையோ பார்க்காமல் அழிந்து போகும் உடமைகளையே முதலாவது பார்க்கிறான்.

இயேசுவைப் பார்க்க திரளான ஜனங்கள் செல்லுமிடமெல்லாம் சென்றார்கள் என்பதை நாம் வேதத்தின் வாயிலாக அறிகிறோம். ஒரு சமயம் சகேயு என்றவன் இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்கவகைதேடினான். பின்பு அவரைப் பார்த்தவுடன் அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்கு போய் அவருடைய உபதேசங்களை கேட்டு கீழ்படிந்து என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்ப செலுத்துகிறேன் என்றான். இயேசுவைப் பார்க்கப்போன இவன் இயேசுவினுடைய உபதேசத்தை பற்றிக் கொண்டு அவருக்கு உண்மையுள்ள சீஷனாக மாறினானே தவிர, அவரைப்போல அற்புதங்கள் செய்யவேண்டும் தன்னை எல்லாரும் பின்பற்றவேண்டும். தானே எல்லாருக்கும் மேலானவனாக இருக்கவேண்டும் என்று விரும்பவில்லை. ஒரு சீஷனுக்கு இருக்கவேண்டிய குணம் மற்றவர்களை பாராது இயேசுவை வேதாகமத்தின் வாயிலாக பார்த்து அவருடைய சிந்தையில் வளருவதுதான். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது"(பிலி.2:5) என்கிறார் பவுல். இன்றைக்கு சிலர் இவைகளை நோக்காமல் வீண் சிந்தையில் வீணராகி வீழ்ந்துபோய் விடுகின்றனர். கர்த்தர் அவனவனை அழைத்தபடியோ, அப்படியே அவனவன் நடக்கக்கடவன்"(1கொரி.7:17). இதை விட்டுவிட்டு வெள்ளாடுகளைப்போல அங்குமிங்கும் பார்ப்போமேயானால் இடது புறத்தில் நிற்கிற ஜனங்களாவோம்.

உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது என்கிறார் சாலொமோன் (நீதி.4:25). உடுத்தி கெட்டவர்களையும், தின்று கெட்டவர்களையும், பார்த்துக் கெட்டவர்களையும் யாவரும் அறிவார்கள். நம்முடைய கண்கள் சரியாய் பார்க்குமேயானால் தவறு ஒன்றுமில்லை. நேராய் நேக்கும் போது தவறு ஏற்படவாய்பில்லை. நம்முடைய பார்வை தவறுமேயானால் கர்த்தரிடம் கலிக்கம் வாங்கி போட்டுக் கொள்ளுங்கள், இதைக் குறித்து வெளி.3:18 ல் வாசிக்கின்றோம். நல்லதை பார்க்கவும், நல்லதைச் செய்யவும் நமக்கு தேவன் கண்களைக் கொடுத்திருக்கிறார். இதைக் கொண்டு பார்க்கவேண்டியதைப் பார்த்து, வளரவேண்டியதில் வளருங்கள்.

இஸ்ரவேலர்களில் சிலர் கானானை 40 நாள் வேவு பார்த்து திரும்பி வந்து துர்ச்செய்தியை அறிவித்தார்கள். ஆனால் காலேப்போ மோசேக்கு முன்பாக நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம் என்ற நற்செய்தியை கொண்டுவந்தான். அனைத்தும் பார்வையில் தான் அடங்கியிருக்கிறது. தாவீது கோலியாத்தை ஜெயிப்பதற்கு முன்பு எல்லாரும் பார்த்து பயந்து அலறி அடித்துக் கொண்டு ஓடினார்கள். தாவீதோ பயந்து ஓடாமல் நான் கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறேன் என்று அவனை மேற்கொண்டான். இன்றைக்கு வெற்றியும் தோல்வியும் உங்கள் பார்வையில் அடங்கியிருக்கிறது. உலகம் பார்க்கிற பிரகாரம் நாமும் பாராமல் கர்த்தருடைய பார்வையில் சிறப்பானவர்களாயிருக்க மேலானவைகளை நாடுவோம்.

## தெரிந்து கொள்ளுங்கள்

வேதாகமம் உறுதிப்படுத்தப்படுதல்

புதைபொருள் ஆராய்ச்சியாளர்களின் மண்வெட்டியானது சத்தியத்திற்கும் வேதாகமத்திற்கும் ஒரு நண்பனாகவே இருக்கிறது. பாலஸ்தீனத்தில் பல ஆண்டுகளாக புதை பொருள்களைத்தோண்டும் பணியில் ஈடுபட்ட பிறகு, சின்சினாட்டியில் உள்ள எபிரெய யூனியன் செமினரியில் உள்ள பெராசிரியர் நெல்சன் குளுக் அவர்கள், தம்முடைய மற்றும் தம் சக பணியாளர்களுடைய கண்டுபிடிப்புகள் யாவும் வேதாகமத்தின் உண்மைகள் மற்றும் சத்தியங்களை உறுதிப்படுத்துகின்றன என்று எழுதினார்.


அவர் "வேதாகமத்தின் வரலாற்றுக்கூற்று எதற்கும் முரண்பட்ட அல்லது மறுக்கின்ற புதை பொருள் கண்டுபிடிப்பு என்பது ஒரு காலத்திலும் ஒன்று கூடக் கண்டறியப்பட்டதில்லை" என்று கூறினார்.

(Nelson Glneck, "New york Times Book Review")

# சபையின் அமைப்பு
## Organizatin of the Church

J.C.Choate

சபையானது அழைக்கப்பட்டவர்களாலும், இரட்சிக்கப் பட்டவர்களாலும், உலக வழிகளை விட்டு விட தீர்மானித்திருக்கிறவர்களாலும், தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்திற்குள் பிறந்திருக்கிற வர்களாலும் உருவாக்கப்பட்டுள்ளது. இது தன் நோக்கத்தில் சர்வதேச அளவிலும், உலக அளவிலும் அமைந்துள்ளது. கிறிஸ்து தம்முடைய சபையை தாம் கட்டப்போவதாகக் கூறினார் (மத்.16:18). மேலும் சபை உலகத்தில் எவ்விடத்திலும்,எங்கும் இருக்கிறது. சபையார் கூட்ட அமைப்பல் உள்ளூரிலும் சபை இருக்கிறது. வேதாகமம் கொரிந்து, தெசலோனிக்கேய, கொலோசெய போன்ற பல பட்டணங்களில் கூடிவந்த சபையைக் குறித்து பேசுகிறது (1கொரி.1:1,2; 1தெச.1:1,2; கொலோ.1). ஒருவர் உள்ளூர் சபை அங்கத்தினராக இருக்கலாம் ஆனால் அவர் உலகம் முழுவதும் எங்குசென்றாலும் அவர் உலகளாவிய சபையின் அங்கத்தினராகவுமிருக்கிறார்.



சபை தனிப்பட்ட மக்களால் உருவாக்கப்பட்டிருப்பதால் இது தேவன் ஏற்படுத்தின நோக்கத்திற்காக ஊழியஞ்செய்யக்கூடியதாயிருந்தால் இது பணிசெய்யும் ஒரு அமைப்பிற்குள்ளாக ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பது அவசியமாகும். இதன் தலைவர் கிறிஸ்துவே, அவர் இந்த அதிகாரத்தை எந்த ஒரு மனிதனோடும் பங்கிட்டுக் கொள்ளுகிறதில்லை. பவுல் கிறிஸ்துவைக் குறித்து, "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்"(கொலோ1:18)எனக் கூறினார். பவுல் மேலும் எபேசு சபைக்கு, "எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்"(எபே.1:22,23)எனக் கூறுகிறார்.

சபையானது பூமிக்குரிய தலைமை ஸ்தாபனங்களைப் பெற்றிருக்கவில்லை. கிறிஸ்து பரலோகத்திலே பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து அவரே சபையின் தலைவராக இருக்கிறார். சபை ஏதாவது "தலைமை ஸ்தாபனங்களை"பெற்றிருக்குமானால் பிறகு நாம் இது தமது தலைவர் இருக்கிறதான பரலோகத்தில் இருக்கிறது என்ற முடிவுக்கு

வந்திருப்போம். "நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்" (கொலோ.3:1)என வாசிக்கிறோம். எபிரெயர்1:3-ம் இதையே போதிக்கிறது. ஆனால் உலக அளவில் சபையைக்குறித்த காரியம் என்ன? கிறிஸ்து தலையாயிருப்பதைத் தவிர உலகளாவிய அமைப்பினை சபை பெற்றிருக்க வில்லை. உள்ளூரில் சபை அங்கத்தினர்கள் சபைக்குள் குழுவாக இருக்கின்றனர், மேலும் ஒவ்வொரு சபையும் சுயமாக செயல்படுகின்றது,மேலும் இது சுயாட்சி செய்கிறது. கிறிஸ்து உள்ளூர் சபையின் தலைவராக இருக்கின்றார், அவரே தம்முடைய புதிய ஏற்பாட்டு வார்த்தையின் அதிகாரத்தின் மூலம் ஆட்சி செய்கின்றார், சபையின் மனிதர் வேதவாக்கியங்களினால் வழிநடத்தப்படுகிறவர்களாக கிறிஸ்துவின் அதிகாரத்தை பூர்த்திசெய்யும் படிக்கு தலைமை தாங்கி நடத்தும் பொறுப்புடையவர் களாகயிருக்கிறார்கள். அவர்கள் போதிக்கின்றவர்களாகவும், உபதேசிக்கின்றவர்களாகவும், தரும காரியங்களையும் சபையின் சுவிசேஷப் பணியையும் திட்டமிடுகிறவர்களாகவுமிருக்க வேண்டும். மேலும் ஸ்திரீகள் மற்ற ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் போதிக்க வேண்டியதும் அவசியம், ஸ்திரீகளால் பல்வேறு தரும காரியங்களையும் அந்நியரை உபசரிக்கும்பணிகளையும் மிகச்சிறப்பாக கையாள வேண்டியதும் அவசியம். மனிதரும் கூட சபைக்குரிய எந்த வேலையையும் செய்ய வேண்டியவர்களாக இருக்க வேண்டும்.

சபை அங்கத்தினர்களாலும், ஆவியினாலும் வளர்கிறது போல, தகுதிவாய்ந்த முதிர்ச்சியடைந்த மனுஷர் மத்தியிலிருந்து மூப்பர்களும் உதவிக்காரர்களும், சபையின் 'மேய்ப்பர்கள்' மற்றும் 'ஊழியர்கள்' போல செயல்படுவதற்கு நியமிக்கபடும் நிலையை சபை அடையவேண்டும். அங்கு இரண்டு அல்லது அதற்கு மேலான மூப்பர்களும், இரண்டு அல்லது அதற்கு மேலான உதவிக்காரர்களும் நியமிக்கப்பட்டு தங்களுடன் ஐக்கியமாகும் அங்கத்தினர்களால் அறிந்து கொள்ளப்பட்டவர்களாய் இருக்கவேண்டும். இந்த மனுஷர் வேதவாக்கியங்களில் கோடிட்டு காட்டப்பட்ட குறிப்பிட்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் (1தீமோ.3; தீத்து1).

மூப்பர்கள் (பாஸ்டர்கள், பிஷப்கள், பிரஷ்பிடர்கள் மற்றும் மேய்ப்பர்கள் என்றும் கூட அழைக்கப்படுகின்றனர்) மந்தையை வழி நடத்த வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் சபையின் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திப்பதில் கவனம் செலுத்த வேண்டியவர்கள். உதவிக்காரர்களும் கூட பணிவிடைக்காரர்களுக்கு ஒப்பிடப்படுகிறார்கள் மேலும் அவர்கள் மூப்பர்களுக்கு சபை பணிகளில் உதவிக்காரர்களாக இருக்கவேண்டும். அவர்கள் வழக்கமாக சபைப்

பொருட்கள் அல்லது சபையின் சரீரதேவைகளை கவனிக்கும் பொறுப்பில் நியமிக்கப்படுகிறார்கள்.

சபையில் மிக உயர்ந்த பணி உள்ளூர் சபையில் மூப்பர்களில் ஒருவராக ஊழியஞ்செய்வதேயாகும். கர்த்தர் சபையின் தனிப்பட்ட ஒரு ஆண் அங்கத்தினர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சபைகளின் மேல் ஆளுகை செலுத்துபவராக ஊழியஞ்செய்ய சித்தங்கொள்ளவில்லை. ஆனபடியால், அவர் ஒரு சபையில் இருக்கும் மூப்பர்களில் ஒருவரை போலிருக்க ஒரு மூப்பரின் அதிகாரத்தை கட்டுப்படுத்தினார். மூப்பராக இருக்கிறவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களோடு இணைந்து சபைப்பணிகளில் ஈடுபட வேண்டும். மேலும் பவுல் பட்டியலிட்டிருக்கிற தகுதிகளை உடையவராக இருக்க வேண்டும். அத்தோடுகூட கர்த்தருடைய நோக்கங்களை நிறைவேற்றும்படிக்கு மூப்பர்கள் தங்களுக்குள்ளேயும் உள்ளூர் சபை அங்கத்தினர்களோடும் கூட இணைந்து ஊழியஞ்செய்ய கற்றுக் கொள்ள வேண்டியது மிக அவசியம்.

ஆடுகளை மேய்ப்பது (அப். 20:28) அல்லது சபையின் ஆவிக்குரிய போஜனத்திற்கு கொடுத்துதவுவது மூப்பர்களுடைய வேலையாயிருக்கிறது. அவர்கள் கள்ள உபதேசத்திற்கு அவைகளை விலக்கிக் காத்து பக்தியற்றவர்களையும் அவிசுவாசமுள்ள சபை அங்கத்தினர்களையும் ஒழுங்குப்படுத்த ஆயத்தமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

உள்ளூர் சபை போதகர்களையும், பிரசங்கியார்களையும் கொண்டிருக்க வேண்டும், மேலும் எல்லா அங்கத்தினர்களும் உண்மையாகவே கர்த்தருடைய ஊழியக்காரர்களாயிருப்பது அவசியம். ஆராதிக்கும்படிக்கு ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் அவர்கள் ஒருவரையொருவர் சந்திப்பதினால் அங்கு ஒற்றுமையிருக்க வேண்டும். அவர்கள் இழந்த நிலையில் இருப்பவர்களுக்கு சுவிசேஷத்தை கொடுப்பதில் பிரசங்கியாகவுமிருக்க வேண்டும். சபையிலும் சமுதாயத்திலும் தேவையிலிருப்பவர்களுக்கு உதவி செய்வதில் இரக்கம் காட்டுபவர்களாக இருக்கவேண்டும்.

கர்த்தருடைய் ஜனங்களைக் கொண்ட ஒரு சபை வளர்ச்சியடைகிறதாகவும், ஆவிக்குரியதாகவும், பிரசங்கிக்கிறதாகவும், விசுவாசமிக்கதாகவுமிருக்கவேண்டும். அப்படியிருக்கும் போது சபை கிறிஸ்தவம் என்பது என்ன என்பதையும், சபை தம்முடைய அங்கத்தினர்களோடு ஒருவரில் ஒருவர் அன்பு கொண்டிருப்பதையும், ஆத்தும பாரம் கொண்டிருப்பதையும் இழந்துபோனதை இரட்சிக்கவும் ஒரு நல்மாதிரியைக் கொண்டிருப்பதையும் எல்லாவற்றிலும் கர்த்தருக்கு ஊழியஞ்செய்து கனப்படுத்துகிறதையும் மெய்ப்பிக்கிறதாயிருக்கிறது. இது ஒழுங்குப்படுத்தப்பட்ட கர்த்தருடைய சபையாகும்.

# நல்லவராய் இருப்பதே நன்று
## *Being "Good" is Good Enough*

எல்லா சமயமும் அடிப்படையில் ஒரே மாதிரியானவையாக இல்லையா? ஒரு மனிதன் **நேர்மையாகவும் உண்மையாகவும், ஒரு சிறந்த அண்டைவீட்டானாகவும், ஒரு சிறந்த மனிதனாகவுமிருக்க** முயற்சிக் கிறவனாகவும் இருந்தாலே தேவன் அவனை ஏற்றுக்கொள்ளுவார் என அனைத்து சமயங்களும் போதிக்க வில்லையா?



அதிகமாக ஜனங்கள் தனிப்பட்ட விதத்தில் உள்ள நற்குணமே தேவனை திருப்தி செய்ய போதுமானது என நம்புவதையே விரும்புகின்றனர். மேலும் **அவர்கள் இது குறித்து தேவன் என்ன கூறுகிறார் என்பதை கண்டுகொள்ளும்படி அவருடைய வார்த்தையை படிக்கின்றதை தவிர்ப்பதையே தெரிந்து கொள்ளுகின்றனர், ஆனால் மாறாக, தங்களை இரட்சித்துக்கொள்ளும்படிக்கு தங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்கின்றார்கள்.** எப்படியோ, தேவன் அவர்களிடத்தில் அதிகமானதை எதிர்பார்த்தாலும் கூட, அவர் அதிகம் எதிர்பார்க்கிறார், அவருக்குக் கீழ்படியும்படிக்கு தங்களுடைய வீழ்ந்துபோன நிலையை மன்னிப்பார் என்று அவர்கள் **அறியாதவர்களாகவே** இருக்கின்றனர். பிடிவாதமான அறிவீனம் தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கின்றதா? தனிப்பட்ட விதத்திலான நற்குணம் போதுமானதா? "உண்மையாகவே, இந்த அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ **மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்;** மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே ...."(அப்.17:30,31).

இந்த வசனம், நியாயத்தீர்ப்பின் நாளிலே தேவன் நம்மைக் கேட்டுக் கொண்டதைக் குறித்த நம்முடைய அறியாமைக்காக நம்மை மன்னிக்க மாட்டார் என தெளிவாகக் கூறுகிறது. நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், நாம் கண்டிப்பாக **அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்**. அவர் கட்டளையிட்டிருப்பதை அவருடைய வார்த்தையின் மூலம் அவர் நமக்குக் கற்பிக்கட்டும்.

நாம் அறியாதிருப்போமானால், நாம் அவருக்குக் கீழ்படியமுடியாது. ஆகவே நாம் கற்றுக் கொள்ளுகிறதான இந்த காரியம் ஒரு கட்டளையாகும். இதை இயேசு, "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்"(யோவா.12:48) என எச்சரித்தார். **நாம் அவருடைய எச்சரிப்பைக் கவனிக்க வேண்டும்: அறியாமை நம்மை இரட்சிக்காது!**

ஆனால் நாம் நம்முடைய சுயநீதி ஜீவியத்தினால் இரட்சிப்படைய முடியாது. ரோம.3:10,23, "அந்தப்படியே, நீதிமான் ஒருவனாகிலும் இல்லை,.....எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி",எனக் கூறுகிறது. ஏசாயா59:1,2-ல், "இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. **உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது"** என வாசிக்கிறோம்.

மனிதன் முதிர்ச்சியடைந்து பாவத்தைத் தெரிந்துகொள்ளும் போது, அந்தப் பாவங்கள் அவனுக்கும் தேவனுக்குமிடையே ஒரு சுவர் போலாகி பிரிவினையை உண்டாக்குகிறது. நாம் நம்மை பாவமற்றவர்களாக மாற்றமுடியாது; ஆனபடியினால் நாம் நம்மை மீண்டும் தேவனுடைய பிரசன்னத்திற்குள் கொண்டுவர முடியாதவர்களாக இருக்கிறோம். நாம் பயிற்சிக்கிற "நற்குணம்" எதுவாயினும் நம்முடைய பாவத்தினால் கறைப்படுத்தப்பட்டதாய் நம்முடைய வாழ்வில் எப்போதும் தோற்றமளிக்கிறது.

இதற்குப் பரிகாரம் என்ன?

நாம் 1பேது.2:21-25-ல் "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், **கிறிஸ்துவும் நமக்காகப் பாடுபட்டு**, நாம் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி மாதிரியைப் பின் வைத்துப்போனார். 'அவர் பாவஞ்செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை'(ஏசா.53:9). அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார்; நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, **அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார் அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்** (ஏசா.53:5). சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும்

கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்" என வாசிக்கிறோம்.

மேலும் 2கொரி.5:21, **"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு,** பாவம் அறியாத அவரை **நமக்காகப் பாவமாக்கினார்"** என விளக்குகிறது. ஆனால் நாம் பாவிகளாகயிருப்பதினால், நாம் மீண்டும் ஒரு முறைகூட வல்லமையுள்ள தேவனுடைய பிரசன்னத்திற்குள் வரும்படிக்கும் நம்முடைய பாவங்கள் நீங்கி அவருடைய நீதிக்குள்ளாக நாம் இரட்சிப்பின் வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படிக்கும் நாம் ஒரு இரட்சகரைக் கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும். நாம் அறிந்திருக்கிறபடி, நம்முடைய பாவங்களை நீக்கும் படிக்கு இயேசு கிறிஸ்து தாமே தம்முடைய சரீரத்தில் அவைகளை சிலுவையின் மேல் சுமந்தார். "நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று..." ரோம.6:6 விளக்குகிறது.

எப்பொழுது மற்றும் எவ்வழியில் நாம் பாவத்திற்கு மரித்து தேவனுக்கு முன்பாக புது சிருஷ்டியாக மாறி, அவருடைய குமாரனின் நீதிக்குள்ளாக உடுத்து விக்கப்படுகிறோம்? "... கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்"(ரோம.6:3,4).

நீங்கள் உங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்க அல்லது இரட்சிப்பிற்காக தேவன் எதிர்பார்க்கிறதைப் பற்றிய உங்கள் அறியாமையை சார்ந்திருக்க தீர்மானித்திருப்பீர்களானால், **திரும்பிச் சென்று இக்கேள்வியை மறு ஆய்வு செய்யுங்கள்.** இழந்த நிலையில் தொடர்ந்திருப்பதைத் தெரிந்து கொள்ளாதீர்கள்.

தமிழில் : குளோரி அர்ஜுனன்.

கிறிஸ்துவின் வசன மாத இதழ் வளர்ச்சிக்கு உதவ
முன் வருகிறவர்கள் கவனத்திற்கு
உங்களுடைய உதவியை வங்கி காசோலை மூலமாகவோ அல்லது மணியாடர் மூலமாகவோ **THE WORD OF CHRIST** என்ற பெயரில் அனுப்பி வைக்கவும். நன்றி.

ஆசிரியர்

Editor
**THE WORD OF CHRIST**
P.O.BOX 5, Batlagundu-624 202,S.INDIA. 04543-263278

# ஆச்சரியம்

**N.K. சாமுவேல்**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே உங்களை வாழ்த்துவதிலே மகிழ்ச்சியடைகிறேன். நம்முடைய கண்கள் அநேக சமயங்களில் சில வித்தியாசப்பட்ட காட்சிகளை பார்க்கிறது. நம்முடைய செவிகள் கேட்கிறது. எதிர்பாராத சூழ்நிலையில் நடக்கும் சம்பவத்திற்கு பெயர்தான் ஆச்சரியம்,வியப்பு அல்லதுபிரமிப்பு. தூயவேதாகமம் கூட ஒரு ஆச்சரியமான புத்தகம்தான். இதில் பல காலக்கட்டங்களில், அநேக நூற்றாண்டுகளுக்கு இடைவெளியில்; பல கலாச்சாரங்களில் வாழ்ந்த மனிதர்களால் ஒரே ஒரு கருத்தை மிகச்சிறப்பாக சங்கிலித் தொடர்போல்



இடைவெளி இல்லாமல் மனுகுலத்தின் மறுவாழ்வைப் பற்றிய தேவனுடைய திட்டத்தையும், அதனிமித்தம் கிறிஸ்துவின் நிகழ்வுகளையும்,இனிவரும் கடைசிநாளில் நடைபெறவிருக்கும் நியாயத்தீர்ப்பைப்பற்றியும் எழுதப்பட்டு இருக்கிறது என்றால் மற்ற புத்தகங்களுக்கு இல்லாத தனி சிறப்பு இதற்கு உண்டு என்பது ஆச்சரியம் அல்லவா!

ஒருசமயம் புத்தக கண்காட்சி பெரிய அளவில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் பல புத்தகங்கள் குறுக்கும் நெடுக்குமாக உயரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. உயரமாக அடுக்கிவைக்கப்பட்டிருந்த இடத்தில் வேதாகமமும் மேலே இருந்தது. அதை கவனித்த ஒருவர் மேலிருந்த வேதாகமத்தை மற்ற புத்தகங்களுக்கு நடுவில் வைத்துவிட்டார். அதைப் பார்த்த ஒரு தேவ ஊழியர் வேதாகமம் எல்லா புத்தகங்களுக்கும் மையமாக உள்ளது என்றார். அதை பார்த்த அந்த நபர் மீண்டுமாக வேதாகமத்தை எடுத்து எல்லா புத்தகங்களுக்கும் அடியில் வைத்துவிட்டார். இதைப் பார்த்த ஊழியர் வேதாகமம் எல்லா புத்தகங்களுக்கும் அடித்தளமாக உள்ளது என்றார். இதை வாசிக்கும் அன்பரே, இது எத்தனை உண்மை. இப்படிப்பட்டதான தூய வேதாகமத்திலிருந்து சில ஆச்சரியப்படவைக்கும் விசுவாசங்களை ஆராய்வோம்.

**மனிதனைக் குறித்து மனிதனின் ஆச்சரியம்**

அப்போஸ்தலர்கள் போதித்ததினால் ஏற்பட்ட ஆச்சரியம் என்னவென்றால், பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தைக் கண்டு அவர்கள் படிப்பறியாதவர்கள் என்றும், பேதமையுள்ளவர்களென்றும் அறிந்த படியினால் ஆச்சரியப்பட்டு அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்றும் அறிந்து கொண்டார்கள்(அப்.4:13). தன் தாயின்

வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்த ஒரு மனுஷன் சுகம் அடைந்ததினால் அவனைக்குறித்து ஆச்சரியப்பட்டு பிரமித்தார்கள் (அப்.3:10). பேதுருவின் பிரசங்கத்தை கேட்ட புறஜாதியார்மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். பேதுருவோடு கூட வந்த யூதர்கள் இதைக் கண்டு பிரமித்தார்கள் (அப்.10:44-46).

**கிறிஸ்துவைக்குறித்து மனிதர்களின் ஆச்சரியம்**

இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால் ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள் (மத்.7:28,29; 13:54). இயேசுவின் வார்த்தைக்கு, காற்றும்,கடலும் கீழ்ப்படிந்ததைக் கவனித்த சீஷர்கள் ஆச்சரியப்பட்டார்கள் (மத்.8:27). இயேசுவினால் சரீர சுகம் அடைவதைக்கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள் (மத்.15:29-31).

**இயேசு ஆச்சரியப்படுதல் (மத்.8:5-13)**

மனிதன் கடவுளின் படைப்பைக் குறித்து ஆச்சரியப்படலாம் அல்லது ஏதோ ஒரு வகையில் ஆச்சரியப்படலாம்.மேலும் இயேசுவின் போதனையையும் அற்புதங்களையும் கேள்விப்பட்டு ஆச்சரியப்படலாம். ஆனால் .... இங்கு இயேசு மனிதனைக் குறித்து ஆச்சரியப்பட்டார் என்றால் அது பெரிய ஆச்சரியம்தான். மாறுபாடுள்ள சந்ததியே, அற்பவிசுவாசியே,மந்த இருதயமுள்ளவர்களே என்று கோபப்பட்ட கண்கள் ஆச்சரியக் கண்ணோட்டத்தோடே திரும்பிப் பார்க்கிறது இஸ்ரவேலருக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று...யார் இந்த இஸ்ரவேலர்கள் எதில் இவர்கள் உயர்ந்தவர்கள் இவர்களை ஏன் ஆண்டவர் உதாரணப்படுத்தவேண்டும்?

விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமின் வம்சவழியில் வந்தவர்கள். மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள். அண்ட சராசரங்களை படைத்த ஜீவனுள்ள தேவனுக்கு சொந்த ஜனங்கள் வாக்குத்தத்தங்களுக்கு சொந்தக்காரர்கள். தேவனுடைய ஆசீர்வாதங்களை அளவில்லாமல் அனுபவித்தவர்கள். நாம் சிந்திக்க போகிற இந்த மனிதனோ இவை எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவன் . சொந்தம் பாராட்ட உரிமையில்லை. நியாயப்பிரமாணம் இவனுக்கு எதிரிடையாக உள்ளது. இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பானவன். அதினாலோ என்னவோ, எனக்கு எல்லாம் இருந்தும் நான் பாத்திரனல்ல என்று தன்னை விளக்கிக் கொண்டு ஒரு வார்த்தை சொல்லும் என்றானோ? அவனுடைய பேச்சும் அணுகுமுறையும் ஆண்டவரை நெகிழவைத்தது, ஆச்சரியப்பட வைத்ததோ? ஒருவார்த்தை சொல்லும் அது போதும் அதினால் என் வேலைக்காரன் சுகமாவான் என்று விசுவாசத்தோடே கேட்டான்.

அது என்ன ஒரு வார்த்தை, ஒரு வார்த்தைக்கு குறைந்தது 5,7, எழுத்துக்களேயிருக்கும்.உதாரணமாகபயப்படாதே, விசுவாசமாயிரு, திடமன்தாயிரு,கலங்காதே. ஒரு வரி என்பது அதில் அநேக வார்த்தைகள் அடங்கியிருக்கும். உதாரணமாக: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, உன் படுக்கையை எடுத்துக் கொண்டுபோ, உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. ஆனால் அந்த மனிதனோ ஆண்டவரால் ஒரு வரியிலல்ல ஒரு வார்த்தையில் சுகம் உண்டாகும் என்று விசுவாசித்தான் ஆண்டவரின் மறுமொழியை கவணியுங்கள்: நீ போகலாம் நீ விசுவாசித்த படியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான். நம்முடைய விசுவாசம் ஆண்டவரை ஆச்சரியப்பட வைக்குமா? சிந்தியுங்கள். நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ வென்று உங்களை நீங்கள் சோதித்து அறியுங்கள் (2கொரி.13:5).

பன்னிரெண்டு வருடமாக உதிரப்போக்கினால் பெரும்பாடுபட்ட ஒரு ஸ்திரீ தன் ஆஸ்திகள் எல்லாவற்றையும் செலவழித்தும் சற்றாகிலும் குணமடையாமல் அதிகவருத்தப்படுகிறபொழுது இயேசுவைக் குறித்துக் கேள்விப் பட்டாள். ஆண்டவரின் வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் தொட்டால் சுகமாவேன் என்று விசுவாசித்து ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள் உடனே ஆரோக்கியமானாள். தன்னிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்தவர். என்னைத் தொட்டது யார் என்று கேட்டார். இதை அறியாதவர்கள், திரளான ஜனங்கள் உம்மை சூழ்ந்து நெருக்கிக் கொண்டிருக்க என்னைத் தொட்டது யார் என்று எப்படி கேட்கலாம் என்றனர்.நெருங்கின ஜனங்கள் எப்படிப்பட்டவர்கள். இயேசுவினிடத்தில் சிறுபிள்ளைகளைத் தொடும்படி கொண்டுவந்தவர்களா? வேண்டிக்கொண்டவர்களா? இயேசுவின் வஸ்திரத் தொங்கல் படும்படி வியாதியஸ்தர்களை கிடத்திவைத்தவர்களா? அப்படிப்பட்டவர்களா இந்த ஜனங்கள்! இல்லை,இல்லை, வெறுப்போடே இந்த ஜனங்கள் எப்படி தள்ளுகிறார்கள், நெருக்குகிறாங்க, இடிக்கிறாங்க என்று சங்கடத்தோடே ஒருவரை ஒருவர் நெருக்கியிருக்க வேண்டும். இப்படிப்பட்ட சங்கடத்தின் மத்தியில் விசுவாசத்தோடே தொட்ட அந்த ஆச்சரியத்தைப் பார்க்கும்படி, ஆண்டவர் ஆசையாய் கேட்டார், தேடினார். அந்த ஸ்திரீ பயந்து நடுநடுங்கி அவருக்கு முன்பாக விழுந்து உண்மையெல்லாம் அவருக்கு சொன்னாள். ஆண்டவர் ஆச்சரியப்பட்டு அந்த விசுவாசமுள்ள ஸ்திரீயைப் பார்த்து விளம்பினது : ஸ்திரீயே உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது நீ சமாதானத்தோடேபோய் உன் வேதனை நீங்கி சுகமாயிரு என்றார். இது தான் ஆச்சரியமான விசுவாசமோ, இதுபோன்ற ஆச்சரியமான எத்தனையோ விசுவாசங்கள் உண்டு வேதாகமத்தை ஆராய்ந்து பாருங்கள் ஆச்சரியத்தை அனுபவியுங்கள். விசுவாசத்தில் பெருகுங்கள் (யூதா20,21)

# சந்திப்போம்! சிந்திப்போம்!

**D.எபினேசர்**

தாவீது : ஹாய்! யோனத்தான். புது வருஷம் எப்படி இருக்கு? மகிழ்ச்சியா இருக்கா?

யோனத்தான் : ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு தாவீது. போன வருஷத்துல இரட்சிப்பைப் பற்றி நிறைய தெரிஞ்சுகிட்டேன். இரட்சிப்பின் படிகளில் ஐந்தாவதும், கடைசிப் படியுமான ஞானஸ்நானத்துக்கு வந்துட்டோம். அதையும் முழுசா தெரிஞ்சிக்கிட்டா இந்த வருஷம் எனக்கு இரட்சிப்பின் வருஷமா இருக்கும்னு நினைக்கிறேன்.

தாவீது : மிக்க மகிழ்ச்சி யோனத்தான். நீ மட்டுமல்ல, இதைப் படித்துக்கொண்டிருக்கிற, இரட்சிக்கப்படாமலிருக்கிற யாவருக்கும் இது இரட்சிப்பின் ஆண்டாக இருக்க வேண்டும் என்று ஜெபிக்கிறேன்.

யோனத்தான் : நல்லது தாவீது. என்னிடம் ஞானஸ்நானத்தைப் பற்றி நிறைய கேள்விகள் இருக்கு. எல்லாத்துக்கும் தெளிவா பதில் சொல்லமுடியுமா?

தாவீது : ஞானஸ்நானத்தைப் பற்றி வேதாகமம் மிகத் தெளிவாகப் போதிக்கிறது. எனவே நானும் உனக்கு தெளிவாகவே பதில் சொல்கிறேன்.

யோனத்தான் : ஞானஸ்நானம் என்றால் என்ன?

தாவீது : மூலமொழியான கிரேக்க மொழியிலே **Baptizo** என்று எழுதப்பட்டிருக்கிறது. அதன் பொருள் தண்ணீருக்குள்ளாக அமுக்குதல் அல்லது முழுக்குதல் என்பதுதான் . தமிழில் இதை திருமுழுக்கு என்று அழகாக மொழி பெயர்த்திருக்கிறார்கள். ஞானஸ்நானம் என்கிற வட மொழிச் சொல்கூட அந்த செயலின் கனத்தை வெளிப்படுத்துவதாகவே அமைந்திருக்கிறது.

யோனத்தான் : எதற்காக ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்?

தாவீது : நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும் படியாக கழுவப்படும் படியாக ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். இந்த வசனங்களை வாசி அப்.2:38; 22:16.

யோனத்தான் : பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ளுங்கள் என்றும், ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றும் எழுதியிருக்கு.

தாவீது : பாவத்தில் விழுந்து விட்ட மனிதன் மனந்திரும்பி ஞானஸ்நானத்தின் மூலம் கீழ்ப்படியும் பொழுது அவனுடைய பாவங்கள் கழுவப்படுகிறது எபே.2:26,27.

யோனத்தான் : தண்ணீர் முழுக்கினால் சரீர அழுக்குகள் வேண்டுமானால் கழுவப்படலாம். பாவங்கள் கழுவப்படுகிறது என்பது அபத்தமாக இல்லையா?

தாவீது : இந்த வசனத்தை வாசித்து தியானித்துக் கொண்டிரு யோனத்தான் 1பேது3:21. உன் கேள்விக்கான பதிலோடு உன்னை அடுத்தமுறை சந்திக்கிறேன்.

(மீண்டும் சந்திப்போம்)

# உலகத்தைக் கலக்குகிறவர்கள்

**வேதவாசிப்பு : அப்.17:1-10**

ஊரைக் கலக்குகிறவர்களை பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். இன்றைக்கு வேதாகமத்திலிருந்து உலகத்தைக் கலக்குகிறவர்களைப் பற்றி தெரிந்து கொள்ளப் போகிறோம். அவர்கள் யார் என்று தெரியுமா? வேறு யாரு பவுலும் சீலாவுந்தான். கலக்குகிறவர்கள் களங்கப்படுத்தி விடுவார்கள். ஆனால் இவர்கள் சுவிசேஷத்தினாலே உலகத்தை கலக்குவதாக இயேசுவை விசுவாசியாத யூதர்கள் வைராக்கியம் கொண்டு இவர்கள் மீது குற்றஞ்சுமத்தினார்கள்.



இந்த இரண்டு தாசர்களுடைய வேலை என்னவென்றால் செல்லுமிடமெங்கும் சுவிசேஷத்தை அறிவிப்பது அநேகரை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்துவது. ஒரு முறை அவர்கள் தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்து அங்குள்ள யூதருடைய ஜெப ஆலயத்தில் போய் மூன்று ஓய்வுநாட்களில் இயேசுவை பற்றி பிரசங்கித்தார்கள். அவர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம்பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து பவுலையும் சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள். சத்தியத்தை நம்புகிறவர்கள் சத்தியத்தை பிரசங்கிக்கிற கூட்டத்தில் இருப்பார்கள்

எல்லா இடங்களிலும் நல்லவர்கள் இருந்தாலும் அங்கும் சில தீயவர்கள் இருப்பார்கள். அதைப்போல பவுல் பிரசங்கித்த இடத்தில் சில தீயவர்கள் இயேசுவை விசுவாசியாமல் இவர்களுக்கு விரோதமாக கூட்டத்தை சேர்த்துக் கொண்டு பவுலையும் சீலாவையும் ஏற்றுக்கொண்ட யாசோனையும் சில சகோதர்களையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக் கொண்டு வந்து. இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்களென்று கூக்குரலிட்டார்கள். இதைக் கேட்டவர்கள் யாசோனிடத்தில் ஜாமீன் வாங்கிக்கொண்டு அவர்களை விட்டு விட்டார்கள். பின்பு பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்திற்கு அனுப்பி விட்டார்கள். அவர்கள் அங்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்.

ஊரைச்சுற்றி ஊதாரியாய் போனான் என்று உங்களில் சிலர் பேரெடுத்து இருப்பீர்கள் பரவாயில்லை. இனிமேலாவது உலகத்தை கலக்குகிற இந்த பவுல் சீலாவைப்போல வருங்காலத்திலே மாறுவதற்கு பிரயாசமெடுத்து ஒழுங்காக ஞாயிறு பள்ளிக்குச் செல்லுங்க, கர்த்தர் அதற்குரிய ஞானத்தையும் பெலத்தையும் உங்களுக்கு தருவார். குட்டையை கலக்கினால் மீன்கள் மிதக்கும், உலகத்தைக் கலக்கினால் ஆத்துமாக்கள் கிடைக்கும். நீங்கள் வருங்காலத்தில் கலக்குவீர்களா?

மனப்பாட வசனம் : "தூரதேசத்திலிருந்து வரும் நற்செய்தி விடாய்த்த ஆத்துமாவுக்குக் கிடைக்கும் குளிர்ந்த தண்ணீருக்குச் சமானம்" (நீதி.25:25)

## பொது அறிவு சோதனை

1. சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?

   **(A)** 500கிலோ மீட்டர் **(B)** 150 லட்சம் கிலோ மீட்டர்

2. ஜப்பான் நாட்டில் டிரைவரே இல்லாமல் ஓடும் ரெயிலின் வேகம் மணிக்கு எத்தனை கிலோ மீட்டர்?

   **(A)** 200 கிலோ மீட்டர் **(B)** 530 கிலோ மீட்டர்

3. இந்தியாவின் பரப்பளவு எவ்வளவு?

   **(A)** 5,000,000சதுர கிலோ மீட்டர் **(B)** 3,287,263சதுர கிலோ மீட்டர்

4. இரத்தத்தின் சிவப்பு அணுக்கள் எங்கு உற்பத்தியாகின்றன?

   **(A)**சதையில் **(B)**எழும்புகளின் உட்பகுதியில்

5. மிகவும் சிறிய இதயம் கொண்ட மிருகம் எது?

   **(A)**பூனை **(B)**சிங்கம்



விடைகள்
1. **(B)** 150 லட்சம் கிலோ மீட்டர்
2. **(B)** 530 கிலோ மீட்டர்
3. **(B)** 3,287,263சதுர கிலோ மீட்டர்
4. **(B)** எழும்புகளின் உட்பகுதியில்
5. **(B)** சிங்கம்

ஒபதியா | பழைய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் | OBADIAH

**பொருள்** : ஏதோமின் பெருமை அதனுடைய வீழ்ச்சிக்கும், நியாயத்தீர்ப்புக்கும் காரணமானது. ஏனெனில் அது, தான் விதைத்ததை அறுத்தது.

**ஆக்கியோன்** : ஒபதியா

**காலம்** : ஒருவேளை கி.மு. 586 விற்கு பின்பு இருக்கலாம்

**திட்டவரைக் குறிப்பு :**

- கர்த்தர் தம்முடைய ஜனத்தின் விரோதிகளை அறிந்திருக்கிறார் அவர்களுடைய பாவங்களை நியாந்தீர்ப்பார் (1:1-14)
- கர்த்தருடைய நாள் தம்முடைய ஜனங்களுக்கு சுதந்தரத்தைக் கொண்டுவரும் (1:15-21)


**சிறப்புச் செய்தி :**

"கன்மலை வெடிப்புகளாகிய உன் உயர்ந்த ஸ்தானத்திலே குடியிருந்து, என்னைத் தரையிலே விழத்தள்ளுகிறவன் யார் என்று உன் இருதயத்தில் சொல்லுகிறவனே, உன் இருதயத்தின் அகந்தை உன்னை மோசம்போக்குகிறது".

**வரலாற்று பின்னணி :**

இப்புத்தகம் எருசலேம் வீழ்ச்சியடைந்த காலத்தை (கி.மு.586) சேர்ந்ததாக இருக்குமேயானால், பாபிலோனியர்கள் யூதாவை முறியடிக்கும்படி, அவர்களுக்கு ஏதோமியர்கள் அளித்த தவறான. சூழ்ச்சியான உதவியின் காரணமாக இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கலாம்.

**சீர்தூக்கிப் பார்**



**"கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார்" (நீதி.16 : 2)**

"நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?" (லூக்கா 6:41)

## வேத அறிவுப்போட்டி எண் 41ல் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| M.அருள்தாஸ் | - செட்டிபாளையம் | D.ஏசுதாஸ் | -சித்தூர்(ஆந்திரா) |
| G. செபாஸ்டீன் | - செட்டிபாளையம் | T.வேலுச்சாமி | -ஜோ.பாளையம் |
| P. அலிஸ்மேரியம்மாள் | -வத்தலக்குண்டு | Dr.G.ஜெயசிங் | -சென்னை |
| Mrs.வனிதாசர்முவேல் | -மதுரை | V.கோவலன் | -மதுரை |
| Mrs.L.P.குமாரி | -மதுரை | S.ராஜபிரசாத் | -மதுரை |
| Mrs.J.வின்சென்ட்ராஜ் | -மதுரை | J.S.நிர்மலா ஜான் | -மதுரை |
| P.மகாலிங்கம் | -மதுரை | A.சேவியர் மேரி | -மதுரை |
| C.சதீஸ்குமார் | -செட்டிபாளையம் | Xஎஸ்தர் சேகர் | -மதுரை |
| J.ஜோஸ்பின் | -செட்டிபாளையம் | A.ரெபேக்காள் | -நாகமலை |
| S.ரெக்ஸ் கிங்ஸ்லி | -செட்டிபாளையம் | P.கந்தசாமி | -கீரனூர் |
| J.D.V.குமார் | -செட்டிபாளையம் | R.கலாவதிராஜா | -சத்திரப்பட்டி |
| N.இம்மானுவேல்ராஜ் | -செட்டிபாளையம் | N.பொன்னி | -மதுரை |
| Mrs.கிரேஸ் லூயிஸ் | -நிலக்கோட்டை | S.அகிலாசுந்தரம் | -நங்கவள்ளி |
| S.தண்டபானி | -சிலுவத்தூர் | T.கனகராஜ் | -அம்மாபாளையம் |
| S.சிங்காரவேலு | -மதுரை | S.R.பெரியசாமி | -சோளுர் |
| Mrs.S.ஆறுமுகம் | -ஒத்தக்கடை | M.ரோஸ்மேரி | -சென்னை |
| Mrs.குளோரி பவுல்சர் | -சென்னை | Mrs.ஜெயந்திநோயல் | -சேலம் |
| N.கமலவேணி | -சென்னை | R சாமுவேல் | -ஊதியூர் |
| G.P.ஏசையன்ராஜ் | -கோபி | V. சரவணகுமார் | -செட்டிபாளையம் |
| V.S.அம்பிகா | -கரிச்சிபாளையம் | N.கஸ்தூரி கிறிஸ்டி | -திருவண்ணாமலை |
| K.G.பாலு | -செட்டிபாளையம் | S.சிவக்குமார் | -செட்டிபாளையம் |
| S.ஜான் ஸ்டாலின் | -செட்டிபாளையம் | S.காமாட்சி | -சமத்துவபுரம் |
| C.சுந்தரக்கொடி | -செட்டிபாளையம் | A.ஜோதிகாந்தம் | -தெக்கலூர் |
| P.M.அரசு | -சேலம் | R.ரூத் | -மதுரை |
| P.M.சத்தியவாசகன் | -சேலம் | C.பிரவின் | -செட்டிபாளையம் |
| G.மெர்சி ரூபி | -கொடுவாய் | K.சாந்தி | -வாடிப்பட்டி |
| S.ஆனந்தராஜ் | -ஈரோடு | L.மனாசேமண்ணு | -சித்தூர் (ஆந்திரா) |

### வேத அறிவுப்போட்டி எண்40-ல் வெற்றி பெற்றவர்களில் விடுபட்டவர்கள்

1. **N. சாலொமோன்** - காங்கயம்
2. **S. செல்லமணி** - காங்கயம்
3. **V. கோவலன்** - மதுரை

### மருத்துவ ஆலோசனை

மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம் (நீதி.17:22)
தேனைக் கண்டுபிடித்தாயானால் மட்டாய்ச் சாப்பிடு; மிதமிஞ்சிச் சாப்பிட்டால் வாந்திபண்ணுவாய். (நீதி.25:16)

### ஆன்மீக ஆலோசனை

ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்துபோவார்கள் (நீதி.11:14)
நீதியையும் தயையும் பின்பற்றுகிறவன் ஜீவனையும் நீதியையும் மகிமையையும் கண்டடைவான். நீதி.21:21

# காது

1. என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய் - நீதி.4:20
2. கேட்கிற காதும், காண்கிற கண்ணும் ஆகிய இவ்விரண்டையும் கர்த்தர் உண்டாக்கினார் - நீதி.20:12
3. மூடனுடைய செவிகள் கேட்கப் பேசாதே - நீதி.23:9
4. கேட்கிற செவிக்கு ஞானமாய்க் கடிந்து கொண்டு புத்திசொல்லுகிறவன், பொற்கடுக்கனுக்கும் அபரஞ்சிப் பூஷணத்திற்கும் சரி - நீதி.25:12
5. ஜீவனுக்கேதுவான கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும் காது ஞானிகளிடத்தே தங்கும் - நீதி.15:31
6. வேதத்தை கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது - நீதி.28:9
7. கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை - பிர.1:8
8. காதிலே கேட்கிறதை நீங்கள் வீடுகளின்மேல் பிரசித்தம் பண்ணுங்கள் - மத்.10:27
9. கேளுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும் - ஏசா.55:3
10. கேட்கிறவர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள் - வெளி.1:3

'ஒரு வழி' தபால் வழி கல்லூரி
மாணவர்களுக்கு
நீங்கள் ஒரு வழி பாடத்திட்டத்தை தேர்வு செய்தமைக்கு நன்றி.முதல் பகுதியைப்
பெற்று இருப்பீர்கள் என்று நம்புகிறோம்.நிதானமாக படித்து நான்கு மாதங்களுக்குள் இறுதித்தேர்வினை எழுதி கல்லூரி முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
இரண்டாவது பகுதியை மே மாதம் முதல் வாரத்தில் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். ஆக நான்கு மாதத்திற்கு ஒரு முறை உங்களுக்கு தொடர் பாடங்கள் வந்து சேரும். ஆறு பாடங்களையும் இரண்டு ஆண்டுகளில் முடித்து ***MASTER COURSE CERTIFICATE*** யை பெறுங்கள். வாழ்த்துக்கள்.

## வேத அறிவுப்போட்டி எண் 41ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. நேராக்கினதினால் | -2நாளா.27:6 | 6. பிரயாணம் பண்ணாதிருப்பார்கள் | - யாத்.40:37 |
| 2. மதிலிடிந்த பாழான | - நீதி. 25:28 | 7. தூபங்காட்டுகிறார்கள் | - ஓசி.4:13 |
| 3. இயேசு கிறிஸ்து | -யோவா.8:23 | 8. பொல்லாங்கன் | - 1யோவா.5:18 |
| 4. இடங்கொடாதிருங்கள் | - ரோம.14:16 | 9. ஒரு முழமாகும் | - எசே.43:13 |
| 5. பவுல் | - 1கொரி.9:22 | 10 உண்டு,எபேசு | - வெளி.2:4 |

## வேதஅறிவுப்போட்டி எண் 42

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பி வைக்க வேண்டும். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

1. யார் எழும்பும்போது யார் மறைந்து கொள்ளுகிறார்கள்; எவர்கள் அழியும்போதோ எவர்கள் பெருகுகிறார்கள்?
2. ஆண்டவராகிய கர்த்தரால் எதற்கு நீங்கும் வழிகளுண்டு?
3. நாம் ஒருவரிலொருவர் அன்பு கூரவேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட எதுவாயிருக்கிறது?
4. தூண்களாக எண்ணப்பட்டவர்கள் யார்?
5. சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமானவன் யார்?
6. தேவனோடே மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும் என்று சொல்லியவன் யார்?
7. புறாவைப்போல புலம்பினேன் என்று எழுதிய ராஜா யார்?
8. உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தைப்போலவும் விடியற்காலையில் தோன்றும் எதைப்போலவும் ஒழிந்துபோகிறது?
9. என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் எங்கே நிறைவாக்குவார்?
10. மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் யாரால் உண்டானவைகளல்ல?

## நடப்புச் செய்திகள்

- விவசாயிகளுக்கு பல்வேறு புதிய சலுகைகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- கூடங்குளம் அணுமின் நிலையம் 2007-ம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும் என்று புதிதாக பதவி ஏற்ற நிர்வாக இயக்குனர் எஸ். கே. ஜெயின் கூறினார்.
- அயல் நாடுகளில் பணிபுரிபவர்கள் தங்கள் நாட்டுக்கு அனுப்பி வைக்கும் தொகையில், உலக அளவில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- செவ்வாய் கிரகத்தில் தரை இறங்கியுள்ள 'ஸ்பிரிட்' ஆய்வுக்கலன் அங்கிருந்து படங்களை எடுத்து 'நாசா' விண்வெளி ஆராய்ச்சி மையத்துக்கு அனுப்பி வருகிறது. மேலும் ஒரு ஆய்வு கலமான 'ஆப்பர் சூனிட்டி' என்ற ஆய்வு கலத்தை அமெரிக்கா அனுப்பியுள்ளது இதுவும் வெற்றிகரமாக செயல்பட துவங்கியுள்ளது.
- டென்னிஸ் ஆட்டத்தில் 16 வயதுக்கு உட்பட்ட பிரிவில் சிறப்பான வெற்றிகளை குவித்து இந்தியாவின் நம்பர்-1 வீராங்கனை என்ற பெருமையை பெற்று அனைவரின் கவனத்தையும் கவர்ந்தவர் யாமினி ஆவார்.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th February 2004.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.




கிறிஸ்துவின் சபை

17.2.102-D/5, ராஜன் நகர், வத்தலக்குண்டு-624 202
திண்டுக்கல் Dt. ✆ : (04543) 263278

குப்பம்மாள்பட்டி – 624 212. கொடைக்கானல் T.K., திண்டுக்கல் Dt.

7. ஆதிவீராச்சாமி நாயக்கர் சந்து, அரண்மனை தெரு, வடகரை
பெரியகுளம்-626 501. தேனி மாவட்டம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 a.m<br>7.00 a.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon<br>Wed,Thu | 2.00 p.m<br>2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Mon, Tue,<br>Wed, Thu,<br>Fri | 5.30 p.m<br>5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m<br>4.00 p.m | Box. 5540<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

**Monthly Magazine**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.